Registered M. 916

THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. June 1918. No. 9

Editor.—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 8.] காளயுக்தி௵ ஆனிமீ [ஸஞ்சிகை 9

1. பத்ராதிபரின் குறிப்புகள் 353

2. ஸ்பர்ஶாதி ஸம்ஸர்க்கதோஷ நிரூபணம்
ஸ்ரீ உப. அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்யர் 363

3. ராஜ ராஜ்ய க்ஷேமம் 373
ஸ்ரீ உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

4. அர்ச்சாவதார வைபவம்
ஸ்ரீ. உப. வித்வான். இஞ்சிமேடு. ரங்கநாதாசார்யர் 381

PUBLISHED BY THE SECRETARY SRI V. S. SABHA.

K. R. Press, Madras.

Copy-right reserved.

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4.

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

இப்பத்ரிகையின் முக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விஸிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1) இந்து நேசன் :—————————— 12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

..............இதில் விஸிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதாநம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர் வேதாந்த தீபிகை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "மானேஜர், வேதாந்த தீபிகை, 11, கேஸவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] காளயுக்தி௵ ஆனி௴ [ஸஞ்சிகை 9.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

வைதிக ஸம்ப்ரதாயம் தேவதைகளுடைய ஆராதந ரூபமான நித்யநைமித்திக கர்மாநுஷ்டாநத்தாலும், வேதாந்தவித்யா ரூபமான ஸர்வேஶ்வரனுடைய உபாஸநத்தாலும் வழிபடத்தக்கது. கர்மங்கள் பலாபிஸந்தியின்றி முமுக்ஷுக்களால் அநுஷ்டிக்கப்பட்டன. அப்போது பித்ருதேவ ரூபதாரியான பகவானே அவற்றால் ஆராதிக்கப்பட்டவன். பித்ருக்களும் தேவதைகளும் அவனுக்குச் சரீரபூதர்கள். பகவான் அவர்க்குள் அந்தர்யாமியாக நின்று கர்ம ரூபமான ஆராதநத்தை ஸ்வீகரிக்கின்றான். தேவதைகளெனப் பட்ட ரூபங்களும் நாமங்களும் பகவானுடைய ரூபநாமங்களே எனும் மதமும் உண்டு. இந்த மதப்படி ஸர்வகர்மங்களாலும் அவனே ஸாக்ஷாத்தாக ஆராதிக்கப்படுகின்றான். வேதாந்த வித்யைகளாலும் பகவான் சில நாமரூபவிஶிஷ்டனாகவே உபாஸிக்கப் படுகின்றான். *நிராதாரமாக உபாஸநை யென்பது கைகூடாது.

ஆனல் மேலே யோசிக்கப்பட்ட பல பகவத் விக்ரஹங்களும் விஶுத்த மநோக்ராஹ்யங்கள். சக்ஷுராதி இந்த்ரியங்களுக்கு அவை விஷயமாகமாட்டா.

மரணத்தின் பிறகு ஜீவனுடைய ஸத்பாவத்தை அநுமிக்கின்ற ஸர் ஆலிவர் லாட்ஜ் முதலான ஐரோப்ய வித்வான்கள், ஸ்தூல சரீரஸ்திதனன ஜீவன், ஒரு ஸூக்ஷ்ம சரீரவிசிஷ்டனுகவே ஸ்தூல சரீரத்திலிருந்து அந்தச் சரீரத்துடன் மரணனந்தரம் வெளிப்படுகின்ருன் என்று சொல்கின்றனர். இதை நம்முடைய வேதாந்த ஶாஸ்த்ரம் பூர்வமே தெரிவித்திருக்கிறது. இன்னும் ஐரோப்யர், ஸூக்ஷ்ம சரீரிகளான ஜீவன்கள், பூலோகவாஸிகளான ஜநங்கள் விஷயமாக ஹிதைஷிகளாய் இருப்பதாயும் சொல்வார்கள். இப்படிப்பட்ட சித்தபரிபாகம் அவர்களுக்கு மரணமானவுடனே உண்டாகுமென்பது விவாதவிஷய மானலும், காலாந்தரத்தில் உண்டாகக்கூடுமென்பதை யாவரும் அப்யுபகமம் செய்யலாம். ஜீவகோடிகளில் சேர்ந்த பித்ருக்களும் தேவதைகளும் பூலோக வாஸிகளிடம் ஹிதபுத்தி யுள்ளவர்கள் என்பது ஒப்புக்கொள்ளத் தக்க விஷயமே. ஆதலால் அவர்களை உத்தேசித்துச் செய்யப்பட்ட கர்மங்களை அவர்கள் ஸாக்ஷாத்காரம் பண்ணி, அவற்ருல் திருப்தியடைவார்களென்று ஏன் ஆஸ்திகன் விஶ்வஸிக்கக் கூடாது? அவர்களுடைய கேவல அநுக்ரஹமே நமக்கு மங்களகரம். ப்ரமாணம்: 'தேவாஸ வயம் ஸுமதௌ ஸ்யாம' என்றும் 'அவி ஹ்ஷ்ய ஸௌமநஸே ஸ்யாம' என்றும் ஶ்ருதி வாக்யங்கள். நம்மைக் காட்டிலும் விசேஷ சக்தியுள்ளவர்களான அவர்கள், நமக்கு இஷ்டப்ராப்தியைச் செய்ய முயல்வாரென்று விஶ்வஸிப்பது யுக்தம். ப்ரயேண அவர்களுக்கு அதிகாரம் உள்ளவரைக்கும் அவர்கள், நாம் வேண்டின பலங்களை க்ஷிப்ரமாகக் கொடுப்பார்கள். இது ஶாஸ்த்ர நிஶ்சயம். ஆனல் முடிவாக ஸர்வகர்மங்களுக்கும் பலப்ரதன் ஸர்வேஶ்வரனே. அந்த பலத்தை ஶீக்ரமாக வேண்டியவர்க்குத் தேவதைகளுடைய ஆராதநத்தை வழியாக அவனே காட்டியருளினன். அதையும் அவனே கொடுக்கலாகாதோ வென்ருல், ஸம்ஸார மோக்ஷத்தைத் தர அவஸர ப்ரதீக்ஷனுய் இருக்கின்ற ஸர்வேஶ்வரனிடம் க்ஷுத்ர பலங்களைப் பாக்யமற்றவன் தான் யாசிப்பன். இவ்வண்ணம் யாசித்தல் கூடாதென்றும், 'யாவநாஜ நஸ்ம்ருதி யுவம்', என்றும் ப்ரமாணம் உண்டு.

ஸம்ஸாரத்தில் ப்ராசீநகாலீநர் இக்காலத்தவர்போல் ப்ராயேண வெறுப்படைந்தாரில்லை. இந்த லோகாநுபவத்தை அவர்கள் இச்சித்தார்கள். புண்யகர்மங்கள் செய்து கந்தர்வ பித்ருதேவ லோக ப்ராப்தியையும் அபேக்ஷித்தார்கள். பரமார்த்த ஸாக்ஷாத்காரம் பிறந்தவர்கள் அக்காலங்களில் இருந்தாரேனும், அநதிகாரிகள் ஸ்வாதிகாரத்தை அதிக்ரமிக்கும்படி அவர்கள் நடந்தார்களில்லை. ‘𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌦𑌹𑌮𑍍 । 𑌸𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃’ என்று சொல்லிப் பகவான் ஸர்வகர்மங்களையும் லோகஸங்க்ரஹார்த்தமாகச் செய்தருளினர்; இல்லாவிட்டால் ஸாங்கர்யம் நேரிட்டுவிடுமென்றார்; ஆதலால் கர்மஸங்கிகளான அஜ்ஞர் பெருத்த லோகத்தில், ஜ்ஞாநி ஸ்வதர்மத்யாகம் செய்து புத்திபேதம் உண்டாக்கப்படாதென்றும் நியமித்தருளினர்; கர்மயோகத்தை அவலம்பித்து ஸர்வகர்மங்களையும் ஜ்ஞாநவ்யபாஶ்ரயன் அநுஷ்டிக்கத்தக்கவனென்று ஏற்பட்டது. காலக்ரமத்தில் ஆசார்யர்கள் ஸர்வஜநங்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று ஜ்ஞாநபக்தி மார்க்கங்களைப் பரவச்செய்தார்கள். அப்போதும் அவர்கள் யாவர்க்கும் ஸ்வதர்மத்தினுடைய ஸ்வரூப த்யாகத்தைநிஷேதித்தே வந்தார்கள்.

ஜ்ஞாநமார்க்கம் ப்ராயேண மிகுந்த க்லேசத்தால் ஸாதிக்கத்தக்கது. பக்தியோகம் அதனால் ப்ராப்யபூதனான பரமாத்மாவினுடைய ரூபகுணாதி ஸ்மரணாநுவ்ருத்தியால் அதைவிட ஸுகரம். இதுவும் இந்த்ரியஜய மற்றவனால் ஸாதிக்கத்தக்கதன்று. ஆதலால், ‘𑌕𑍍𑌲𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑍍’ என்று பகவானுடைய உபதேசம் பிறந்தது. ஸாதாரண ஜநங்களுக்கு மிகுந்தது ப்ரபத்தியும், பகவானிடம் ப்ரியமெனப்பட்ட பக்தியுமதான். இவைதான் கலியுகத்தில் முமுக்ஷுக்கள் யாவராலும் அவலம்பிக்கத்தக்க மார்க்கங்கள். பகவானுடைய பரவ்யூஹாதி ரூபங்கள் முக்த போக்யங்கள். அவதாரரூபங்களெனும் விபவ ரூபங்கள் தத்ஸம காலீநரான ஸுக்ருதிகளுக்கு அநுபவயோக்யமா யிருந்தன. அவற்றின் ஸ்மரணமதான் பின்னுள்ளார்க்கு உதவும். அந்தர்யாமி ரூபம யோகிகளால் மட்டும் த்யாநிக்கக் கூடியது. நமக்கு உரியது அர்ச்சாவதாரம் தான். காலமீதச வைகுண்யம மபருகாதிருந்த மட்டும் அர்ச்சாவதாரங்களில் பகவத்ஸாக்ஷாத்காரம செய்த நாராயண பராயணர்கள் கலிகாலத்திலும் அவதரித்தார்கள்;

த்ராவிட தேசங்களில் அவர்கள் விசேஷமாக இருந்தார்கள். அவர்களுடைய திவ்யஸூக்திகள் யாவும் இன்றுவரைக்கும் பாகவதர்கள் ஆநந்தத்தோடு பருகப்பட்ட அம்ருதமாகத் தோற்றுகின்றன. திவ்யதேசங்களில்அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கப்பட்ட புருஷோத்தமனிடம் அவர்க்குண்டான ப்ரேமை அளவிடக்கூடாததே. ஸர்வஶாஸ்த்ரங்களிலும் ஸம்பூர்ணாதிகாரத்தை வஹித்த தேசிகன், வரதனுடைய சுஹ்ருஷ விஹாரமான ஆபிரூப்யத்தை நித்யாநுபவம் செய்துகொண்டிருந்த ஸ்திதியில், வைகுண்டவாஸத்திலும் தமக்கு அபிலாஷையின்மையை ப்ரதிஜ்ஞை செய்தாரன்றோ? இந்த ஸ்திதி இப்போது மாறுகின்றது.

தேசிகன் காலத்திலேயே துருஷ்க யவநாதிகளால் திவ்ய தேசங்கட்குப் பல விதமான கஷ்டங்கள் நேரிட்டுவிட்டன. அயோத்யா மதுரா முதலான மஹா ஸ்தலங்களில் அவதார ஸ்தாநங்கள் கோரிகளாயின. காசி முதலான நகரங்களில் வைஷ்ணவ சைவ மந்திரங்கள் கோரிகளாக மாறின. இவ்வித பரிபவங்கள் சுத்ரா வி நிலைத்துவிட்டன. ஸ்ரீரங்காதி திவ்யதேசங்கள் ம்லேச்சாக்ராந்தங்களாகி நித்யாராதநமும் நின்றுபோய்ப் பாகவதர் தேசாந்தரங்களில் மறைந்து வாஸம் செய்ய நேர்ந்தது. ஸர்வபூதாந்தராத்மாவாய்ப் பகவான் ஸதா இருக்கும்போதும், மந்த்ரவீர்யத்தாலும் ஸ்தாபகனுன குருவின் மாஹாத்ம்யத்தாலும், அர்ச்சையில் ப்ரகர்ஷேண ஸாந்நித்யம் செய்கின்றுனென்றும், அர்ச்சா ஸத்ருஶமானதோர் அப்ராக்ருதமான திருமேனியுடன் எழுந்தருளி அர்ச்சையில் நித்யஸாந்நித்யம் செய்கின்றுனென்பதும் ஆகம ப்ரமாண்ய விஸ்வாஸிகளுடைய நிஶ்சயம். இன்னும் அபரோக்ஷ ஸாக்ஷாத்கார ஸமர்த்தர்களான ருஷிகளும் ஆழ்வார்களும் பாகவதர்களும் ப்ரதிமைகளில் பகவானைத் தர்சிக்கின்றுர்கள் என்று அவர்கள் சொல்வார்கள். தன்னைக்காட்டிலும் ஈஸ்வரன் ஒருவன் இல்லையென்று ப்ரமித்த அஸுரன், தனது குமாரனை நோக்கி 'க்வாஸௌ' என்று வினவி, முன்னமே விஷ்ணு ஸர்வத்ர ஸ்திதனென்று குமாரன் சொன்னதை ஸ்மரித்துக்கொண்டு, 'யத்ஸர்வத்ர ஸ ஸ்தம்பே ந த்ருச்யதே' என்று கூவினுன். அதற்குமேல் புராணகர்த்தா, 'ஸத்யம் விதாதும் நிஜ ப்ருத்ய பாஷிதம் வ்யாப்திம் ச பூதேஷ்வகிலேஷு சாத்மந: அத்ருச்யதாத்யத்புதரூப முத்வஹன் ஸ்தம்பே ஸபாயாம் ந ம்ருகம் ந மாநுஷம்' என்று

சொல்லி, நிஜப்ருத்யன் சொன்னது ஸத்யமென்று காட்ட உகந்தருளிப் பகவான் ஸ்தம்பத்தில் ஆவிர்ப்பவித்தான் என்றனர். இது பரமகாருணிகனான வாஸுதேவனுக்குப் பொருந்திய வ்யாபாரம். லோகத்தில் ஹிரண்யகசிபு மறுபடி உண்டாகவில்லை. ப்ரஹ்லாதஸத்ருஶ பக்தனும் பிறக்கப்போகின்றானில்லை. ஆகிலும், தமருகந்த திவ்யமங்கள விக்ரஹத்தின்கண் தத்ஸத்ருஶமானதோர் ஶுத்தஸத்வமயமான திருமேனியுடன் எழுந்தருளி ஸாந்நித்யம் செய்கின்றானென்பதை அநுமத்தன் எவன்தான் மறுக்க வொண்ணும்? ஆனால் - ‘[illegible]’ என்கிறபடியே, அந்த அப்ராக்ருத திருமேனி ஸாதாரண ஜநங்கட்கு த்ருஷ்டிகோசரமாகாது.

தத்காலம் பாஸ்சாத்யவித்யா வலையில் சிக்கித் தம்சித்த ப்ரஸாதமிழந்தவர் பழக்கத்தால், த்ருஷ்டிகோசரமாகும் ப்ரதிமையைக் காட்டிலும் வேறொன்றுமில்லை யென்று விளம்பும் நாஸ்திகர் பெருகுகின்றனர். இவர் வழிகளில் மற்றோர் நுழையாதிருக்கும் வண்ணம் திவ்ய தேசங்கள் ஸம்ரக்ஷிக்கத்தக்கவை. இவ்வித ரக்ஷணம் தவறும்படிகளை யோசித்தே நிகமாந்தார்யனும், திவ்ய தேசங்களில் இதராபிலாஷ ஸ்ப்ருஹையற்ற பாகவதோத்தமர்க்கு விபக்ஷர்களால் உண்டாக்கப்பட்ட பயங்களை நீக்கியருளவேண்டுமென்று ஸ்ரீரங்கநாதனை ப்ரார்த்தித்தார். ஸ்ரீரங்கத்திற்கு நேர்ந்த கஷ்டங்களால் அதுவும் பாகவத வாஸார்ஹதையைப் பொருந்தலாமென்று பயந்து, ‘[illegible]’ என்று, சத்ரு பயமற்றதும் பரஸ்பரஹிதைஷிகள் வஸிப்பதுமானயாதேனுமோர் திவ்யதேச வாஸத்தையும் அபேக்ஷித்தார். க்ருதக்ருத்யர்களுக்குத் திவ்யதேச வாஸம் நேரிடாமற் போகலாமென்று யோசித்து, ‘[illegible]’ என்கிற ஸ்லோகத்தினால், அவர்கள் ஏகாக்ரசித்தத்துடன் பகவதாராதநம் பண்ணக்கூடியதும், பாரமைகாந்த்யத்தில் முயன்ற யாரேனுமொரு பாகவதனுடைய ஸங்கம் கிடைக்கக்கூடியதுமான ப்ரதேச விசேஷத்தை அவர்கட்கு வைகுண்டகல்பமான வாஸஸ்தானமென்றும், பாகவதஸம்ருத்தி எனப்பட்ட ஓள

சித்யாதிஶயத்தாலேயே திவ்யதேசங்களை வாஸார்ஹமாக மஹநீயர்கள் கருதினார்களென்றும் அருளிச்செய்தார்.

பிம்பங்களில் பகவத் ஸாந்நித்ய மெனப்பட்டது ஶாஸ்த்ர நிஶ்சயமானாலும், அது பரமைகாந்திகளுக்கு மாத்ரம் ப்ராமாண்ய பாவத்தை இழக்காமல் நிலைபடும். அர்ச்சாவதாரத்தில் பகவான் அர்ச்சக பராதீநதைக்கு எல்லை நிலமாவதாகத் தேசிகன் திருவுள்ளம்பற்றினார். ஆகமங்களில் 'அர்ச்சகஸ்ய ஹரிஸ்ஸாக்ஷாத்' என்று, அர்ச்சகனைப் பகவானென்றே சொல்லப்படுகின்றது. இன்னும் அவனை ஆசார்யனென்றும் குருவென்றும் வர்ணிக்கப்படுகின்றது. தேசிகன் காலங்களில் அர்ச்சகனுக்கு ஶாஸ்த்ர த்ருஷ்டியால் உண்டான ஏற்றம் போகவில்லை. இப்போது அர்ச்சகனெனப்படுவோன் ப்ராயேண ஸ்வநிஷ்டையைப் பறிகொடுத்தவனே. அதுவுமன்றி அர்ச்சாரூபியான ஸர்வேஶ்வரன் அவனிடம் அத்யந்த பராதீநதையை வஹித்திருக்க, அவனும் கோவில் விசாரணைகர்த்தர்களுடையவும் மற்ற பலருடையவும் அதிகாரத்துக்கு மிகவும் பயப்படவேண்டியவனாயிருக்கின்றான். இவ்வளவு ஸங்கடத்தையும் ஸஹித்துக்கொண்டு பகவான் தன்னடியார்க்கு அருள்புரியவேண்டிய காலம் வந்துவிட்டது. விசாரணைகர்த்தர்கள் இதையெல்லாம் யோசிக்கின்றார்களோ?

'ஸ்ரீ வைகுண்டனுடைய கதாம்ருத ரஸத்தைப் புஜிக்கும் மஹநீயர்களுடைய மநஸ் ருசிக்காத திவ்யதேசம் பஹுமாநார்ஹமன்று' என்று வேதாந்ததேசிகன் திருவுள்ளம்பற்றினார். இந்த ஸ்திதி பகவத்ஸ்தாநங்கட்குப் பல காரணங்களால் உண்டாகக்கூடியது. ஏககலாநிஷ்டர்களுக்கு ஏகதேசத்தில் வஶமான ஸந்நிதிகளில் கலாந்தரநிஷ்டர்களுக்குப் பரிபவாதிகளால் கேவல ஸேவார்த்தமாகவும் ப்ரவேசம் தடைபடக்கூடியதே. பரிபவங்கள் ப்ரத்யக்ஷத்தில் காணப்படாமற் போனபோதிலும், சித்தகாலுஷ்யத்தை உண்டாக்கத்தக்க ஸாமக்ரிகள் ஸர்வத்ர த்ருஷ்டிகோசரங்களாக நின்று, பகவத் ஸேவாதிகளுக்குப் பொருந்தின சித்தைகாக்ரியத்தை நிலைக்கவொட்டாமல் தடுப்பன. உபய கலாநிஷ்டர்களுக்கும் ஸமமான ப்ரவேசம் மைஸூர் மலையாள ராஜ்யங்களில ஸர்வ திவ்ய தேசங்களிலும் உண்டு. பரிடிஷ் ராஜ்யத்தில மட்டும் இந்த ஆசாரம் காலக்ரமத்தில் மாறிப்போய்விட்டது. இவ்விடங்களில உபயகலாநிஷ்டர்களுக்கும் ப்ரவேசம் உள்ள

தேவஸ்தானங்களில் இடைவிடாமல் கலஹங்கள் ஜனித்துக்கொண்டிருப்பதால், பகவதபசார பரம்பரைகள் வளர்ந்துகொண்டே ஸேவார்த்திகளுக்கு ஶாந்தியுண்டாவதற்கு அவகாசம் மிகவும் குறைந்துகொண்டு வருகின்றது. இப்படிப்பட்ட திவ்யதேசங்களில் தர்மரக்ஷகத்தில் நியுக்தர்களான அதிகாரிகள் அதிகாரம் குறைந்து நிற்கின்றனர். அதிகாரம் பல அவஸரங்களில் போலீஸார்களிடமும் மாஜிஸ்ட்ரேட்களிடமும் விஶ்ராமித்துப் போகின்றது. யேநகேநாபி ப்ரகாரேண பகவானுக்குப் பரிபவாதிகளும் பாரதந்த்ர்யமும் ஸேவார்த்திகள் கண்டு வருந்தும்படி வ்ருத்தியாகின்றன.

விசாரணைகர்த்தர்களில் பலர் தமது வ்யாபாரத்தைக் கைங்கர்ய புத்தியால் செய்வதில்லை. அதிகாரம் ஒருவனுடையதாகில், அது அவனுக்கு அஹங்கார மமகாரங்களை விளைவிக்கின்றது. பலரிடம் நின்றதாகில், அவர்க்குள் அது கலஹத்தை ஜனிப்பிக்கின்றபடியால் கோவில் கார்யங்கள் ஸரிவர நடப்பதில்லை. விசாரணை கர்த்தா பரதேசஸ்தனானால் அவன் தேவஸ்தானத்தை இஷ்டவினியோகார்ஹமாக எண்ணி, ஸ்வபந்து ப்ருத்யர்கள் பிழைத்துப் போகும்படிக்கும், உபபந்நராகும்படிக்கும், அதை ப்ரயோஜனப் படுத்துவதும் ஸஹஜமாய்ப் போயிருக்கின்றது. தேவாலயங்கள் கெட்டுப்போக ஏற்பட்ட பல ப்ரகாரங்களும் ஒன்றாகக் கலந்து, ஒவ்வொரு பகவத் ஸந்நிதிக்கு மிக்கக் கேடு விளைவிப்பதையும் நேரில் பார்க்கின்றோம். அர்ச்சகனோடு முடிவு பெறாமல், மேலே விவரித்தபடியே பல ஜனங்களுக்கும் பராதீனமாகும்படி அர்ச்சைகள் நின்றுவிட்டால் திவ்யதேசங்களில் ஸாதாரண ஸேவார்த்திகளுக்கு விஶ்வாஸம் குறைவுபடக் கேட்கவேண்டியதில்லை

முக்யமாகக் கோவில் பரிஜனங்கள் வ்ருத்திக்காகவே கோவில்களை ஆஶ்ரயிக்கின்றார்கள். அவர்கள் அர்த்தப்ரதானர்கள்; கைங்கர்யமென்பதை மிராசாக எண்ணிப் பாத்யம் கொண்டாடுகின்றவர்கள். அக்ருத்ய ஶதங்களில் உள்புகாமல் அவர்க்கு ஜீவனம் கட்டமாட்டாது. ஆதலால் அவர்களை ஆளச் சக்தியற்றவன் விசாரணைகர்த்ருத்வத்தில் நியோகிக்கப்பட்டால், பகவத் ஸந்நிதிகளில் பாகவதர் விமுகராவதில் விஸ்மயமில்லை. பகவத் த்ரவ்யாபஹாரத்தில் ரமித்த அதிகாரிகள், கோவில் சிறுதொழிலாளர்களை அவர்கள் போகும் வழியே விட்டுவிட்டுத் தமது உத்தேஶ்யத்தை நிறை

வேற்றிக்கொள்ளுகிறார்கள். எஞ்சித் தீமையே செய்கின்ற சிறு தொழிலாளர்க்கும் ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்துக்கும் பகு தூரம். இவர் பலத்த கோவில்களில் பகவத் ஸ்தோத்ரங்களைக் கேட்க அமையாது. திட்டுச் சொற்கள் த்ராவிட பாஷைகளில் போல், பாஷாந்தரங்களில் பரிணமிக்கவில்லை. இதர பாஷைகளில் ஸப்யமாநனிடம் இல்லாதவையும் உள்ளவையுமான தோஷங்கள் மாத்ரம் ஸபிப்பவன் வாய்வழியாக வெளியேறும். தமிழிலோ ஸப்யமாநனுடைய மாதா ஸஹோதரிகள் பார்யை முதலானவர்களும் ஸபிப்பவன் இச்சையால் பகு புருஷர்களுடைய ஸம்ஸர்க்கத்தை அபவாத ரூபமாயாவது அடையவேண்டியதாகின்றது. தமிழில் வைபவர்கள் ஸாதாரண வ்யவஹாரங்களில் விலக்கப்பட்ட பல சப்தங்களை வாயினால் சொல்லி மனத்தினால் சிந்திக்கின்றார்கள். இவ்வித பருஷோக்திகள் அர்ச்சைகள் முன்பாக அடிக்கடி ப்ரயோகிக்கப்படவும் அதிகாரி யெனப்பட்டவர் யாதொரு செயலுமற்று நிற்கவும், பகவத் ஸாந்நித்யத்தைப்பற்றி ஒருவன் ப்ரமிக்கவும் இடமற்றுப்போகின்றது. இப்படிப்பட்ட ஸ்திதியைத் தேவாலயங்கொள்ள விசாரணைகர்த்தர்கள் ஸஹகரிக்கவும் நேர்ந்தால், அவர்களுடைய ஸாதுத்வம் தூரநுமேயமாய் விடுகின்றது. நாம் கண்டதையும் கேட்டதையுமே இவ்வண்ணம் எழுத நேர்ந்தது.

இந்த ஸ்திதியில் ஸேவார்த்திகள் என் செய்வார்? துருஷ்கர்களால் தேவாலயங்களுக்குப் பயம் விஸ்தரித்த காலத்தில், அவர்களைப் பற்றித் தேசிகன் கலி தூதரென்றும் ஸாக்ய லோகாயித துல்யரென்றும் சொன்னார். நம் ஸம்ப்ரதாயஸ்தரெனப் பெயர்கொண்ட போதிலும், மர்யாதைகளைக் கடந்தவர்களான சிறு தொழிலாளர்களைக் கண்டால், ஸர்ப்பத்தைக் கண்டாற்போல் பகவான் ஒதுங்கி நிற்கமாட்டானோ? ‘𑌨 𑌹𑍍𑌯𑌮𑍍𑌮𑌯𑌾𑌨𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌨 𑌦𑍇𑌵𑌾 𑌮𑍃𑌚𑍍𑌛𑌿𑌲𑌾𑌮𑌯𑌾𑌃 । 𑌤𑍇 𑌪𑍁𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌰𑍁𑌕𑌾𑌲𑍇𑌨 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍇𑌵 𑌸𑌾𑌧𑌵𑌃’ என்று அவனே சொன்ன வசநம். ஸாதுக்கள் ஸம்பந்தத்தால் தான் தீர்த்தங்களுக்குப் பாவநத்வம்: அவர்களுடைய ஸம்ருத்தியால் தான் அர்ச்சைகளில் பகவான் ஸாந்நித்யம் செய்கின்றானெனும் வ்யவஹாரம். அவர்கள் தூர விலகும்படிக் கோவில்கள் முடிந்துபோனால் அங்கே தெய்வம் நிலைக்குமோ? ராவ

ணனுடைய தௌராத்ம்யத்தைக் கண்ணுற்ற பிராட்டி '[Grantha text]' என்று லங்கையில் ஸாதுக்களுடைய அபாவத்தை ப்ரதமத்தில் ஶங்கித்தாள். பிறகு விபீஷணன் இருக்கின்றதை நினைத்து, '[Grantha text]' என்று சொன்னாள். தௌராத்ம்யம் மிகுந்த ஆலயங்கள் லங்காதுல்யமான ஸ்தாநங்களாக மாட்டாவோ? அர்ச்சைகள் அங்கு இருந்த போதிலும் லங்காருத்த விதேஹராஜ தநயையைப் போல் அவை தத்ஸதாநங்களுடைய கேட்டையே ஸூசிப்பிக்கும். பட்டர்பிரானென்று பெயர்கொண்ட ஒரு கோவில், மடைத்தொழில் செய்வோனுடைய தௌராத்ம்யத்தைக் கண்ணுற்ற மஹாகவி வேங்கடாசார்யர், '[Grantha text]' என்று ஒரு ஶ்லோகத்தைச் சொன்னாரென்று ஒரு கதையுண்டு. ஒருவன் தௌராத்ம்யம் அவ்வண்ணம் ஸாதுக்களுக்கு ஸந்தாபம் விளைவித்ததாகில், கோவிலே தந்மயாரால் வ்யாப்தமானால் அது [Grantha text] ஸுக்குக்களுடைய மநஸ்ஸுக்கு ருசியளிக்கமாட்டாது.

ஆதலால் தர்மரக்ஷகர்கள், பகவான் அர்ச்சைகளில் ஸாந்நித்யம் செய்யும் காரணங்களை யோசித்து, அவை ஸந்நிதிகளில் தவறாமல் நிலைக்க முயல்வதுமன்றி, ஸாந்நித்யாபாவ காரணங்களையும் கண்டறிந்து, அவை ஸந்நிதிகளில் ப்ரவேசியாமலிருக்கவும் வழி தேடவேண்டும். ஶாஸ்த்ர நிஶ்சயங்கள் எப்படியானாலும் ஜநங்களுக்கு விஶ்வாஸம் விலகாதபடி ஸந்நிதிகளைக் காப்பாற்றவேண்டும். இந்த முக்யமான விஷயத்தில் அவர்கள் பராங்முகர்களானால், அவர்களை நாஸ்திக துல்யராக ஜநங்கள் நினைக்க நேரிடும். அபவாத ஸாமக்ரிகளைப் பெருக்கிக்கொண்டே அபவாதம் வருகின்றதே யென்று மநஸ்தாபப்படுதல் விவேகாபாவ ஸூசகமாய் நிற்கின்றது. நாம் இவ்வளவுதூரம் சிந்தித்த காரணத்தாலேயே தேவாலயங்கட்கு நற்காலம் வந்துவிட்டதாக நினைக்கின்றோமில்லை. தேவாலயங்கட்கு ராஜாக்களுடைய ரக்ஷணம் இல்லை. சட்டமும்

கோர்ட்டுகளும் அர்த்தவான்களுக்குத்தான் ஸஹாயம் செய்கின்றன. பகு ஜநங்களுக்குப் பொதுவான விஷயம் ஒருவர்க்கும் அக்கரை உண்டாக்குவதில்லை. கலியின் கொடுமையைத் தடுக்க வழியில்லைபோல் தோன்றுகின்றது. ‘நாஸௌ ரக்ஷஸ்ய ஸாமர்த்யம் க்வசித் ந ஜாது ஸுகது:கானி யஸ்ய ப்ரதிபத்யதே । ந ஹி ஸஹஸா யந்த்ரா ஸர்வ வித்யாஜனா:’ என்று ஹநுமான் சொல்லி ‘ஸாக்ஷாத் ஸர்வ ஸம்ஹாரவான்’ என்று பராக்ரமமுள்ளவர் முடித்தார். தத்காலம் ஜநங்களுக்குள் பராக்ரமமேது? ஜாநபத துக்கத்தைப் பற்றி ஒருவன் ஸோகப்படுவதில் பயனில்லையென்று ஒவ்வொருவனும் சும்மாவிருக்க நேரிடுகின்றது. இந்த ஸ்திதியின் கார்யங்களைக் கண்டு நாம் வருந்துகின்றோம். அதைப்பற்றிப் பின்னும் சிறிது சிந்திப்போம்.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	ப.
1.	ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்)	0	2	0
2.	ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஸிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
3.	ஸ்ரீ பாகவத தசஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
4.	ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்	0	4	0
5.	ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் (ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது	0	4	0
6.	ஆர்யாப்யுதயம். (ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசாரியர்	0	2	0
7.	ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேஸ விமர்ஸம் (ஸ்ரீ. உப. எம். கே. தாதாசாரியர்)	0	3	0
8.	வேதாந்ததீபிகை ஸம்புடம் III	2	0	0
	Do V	2	0	0
	Do VI	2	0	0
	Do VII	3	0	0

ஸ்ரீ:.

ஸ்ரீரங்கநாதாய நம:.

ஸ்பர்சாதி ஸம் ஸர்க்கதோஷ நிருபணம்.

-(தொடர்ச்சி.)

ஆனல் இம்மாதிரி சேதநாசேதந வஸ்துக்கள் எல்லாவற்றி லிருந்தும் குணம் அல்லது தோஷ முள்ளவைகளான பரமா ணுக்கள் எப்பொழுதும் வெளிப்பட்டுக்கொண்டிருப்பனவாகச் சொல்லும்போது, அவைகளின் ரூபத்தை நேரில் ஸாக்ஷாத்கரிக்க முடியவில்லை என்கிற காரணத்தால் அவைகள் இல்லையென்று ஸாதித்துவிடக் கூடாது. இவ்வணுக்களின் ரூபம் வெகு ஸூக்ஷ்ம மாயிருக்கிறதால், அது நமது கண்களுக்குப் புலப்படாவிடினும், கார்யத்தினல் இவைகளின் இருப்பை நாம் நிஸ்சயிக்க முடியா மல் போகாது. இது ரோக விஷயத்தில் ஸ்பஷ்டமாக வெளியா கிறதைக் காணலாம். குஷ்டாதி ரோகமுள்ளவர்களுடன் ஸம் ஸர்க்கிக்கக் கூடாதென்றும், அப்படி ஸம்ஸர்க்கிப்பவருக்கு ரோகிக்கு ஸமாநமான ரோக முண்டாகிறதென்றும் எல்லா தே சத்திய வைத்ய க்ரந்தங்கள் உத்கோஷிப்பதுடன், இது உலகத் தாரால் நன்றாய் அநுபவிக்கப்பட்டு வருகிற விஷயமே. இங்கு கீழ்ச்சொன்ன மாதிரி பரமாணுக்களுடைய ஸம்பந்தமே ஸமாந ரோகோத்பத்திக்குக் காரணமென்று சொல்லவேண்டுமே யல் லது வேறு வழியில்லை. குஷ்டம், ஜ்வரம், நேத்ரோபாதி, விஷூசி முதலிய ரோகங்கள் ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் சீக்ரத்தில் ஸங்க்ரமித்து அங்கு ஸமாநமான ரோகத்தை உண்டுபண்ணு வதை நாம் எல்லோரும் அறிந்துவருகிறோம். இவைகள் எப் படி ஸங்க்ரமிக்கின்றன வென்று யோசிக்கும்போது ரோகிகளு

டைய சரீரங்களிலிருந்து ரோகமயங்களான அணுக்கள் வெளியாகி, ஆங்காங்கு ஸங்க்ரமிக்கின்றனவென்பதைத் தவிர வேறு உபபத்தி சொல்வதற்கில்லை. இவ்வபிப்ராயத்தைக் கொண்டு தான் ஸம்ஸ்க்ருதத்தில் ‘ குஷ்டம் ஜ்வரஶ்ச ஶோஷஶ்ச நேத்ராபிஷ்யந்த ஏவ ச । ஔபஸர்கிகரோகாஶ்ச ஸங்க்ராமந்தி நராந்நரம் ॥’ (நி. சு. 5. ஶ்லோ. 47) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ‘ நராந்நரம் ஸங்க்ராமந்தி ’, அதாவது : ‘ ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனிடத்தில் கீழ்ச்சொல்லிய ரோகங்கள் ஸங்க்ரமிக்கின்றன’ என்று சொல்வதை நன்கு கவனிக்கவேணும். ஒருவருடைய கண்ணிலும் புலப்படாமல் இவ்வியாதிகள் எப்படி ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் போகமுடியுமென்பதைக் கவனிக்கும்போது, கீழ்ச்சொல்லியபடி ரோகமயமான அணுவை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இவ்வணுக்கள் மூலமாக ரோகங்கள் ஸங்க்ரமிப்பதற்கு நிமித்தங்களை ஸம்ஸ்க்ருதத்தில் நிதாநஸ்தாநத்தில் சொல்லும்போது ‘ ப்ரஸங்காத் காத்ரஸம்ஸ்பர்ஶாந் நிஶ்வாஸாத் ஸஹபோஜநாத் । ஸஹஶய்யாஸநாச்சாபி வஸ்த்ரமால்யாநுலேபநாத் ॥ ’ ‘ ஔபஸர்கிகரோகாஶ்ச ஸங்க்ராமந்தி நராந்நரம் ॥ ’ (சு. 5 46 47) என்பதால் தர்மசாஸ்த்ரங்களில் சொல்லியதுபோல் ஸ்பர்ஶாதிகளே முக்ய நிமித்தங்களென்று சொல்லப்பட்டிருப்பதை நாம் நன்கு கவனிக்கவேண்டும். இதுபோல் வாக்படரும் ‘ ஸ்பர்ஶைகாஹாரஶய்யாதி ஸேவநாத் ப்ராயஶோ கதா: । ஸர்வே ஸஞ்சாரிணோ நேத்ரத்வக்விகாரா விஶேஷத: ॥ ’ (அஷ்டா. நி. 14. 41) என்பதால் வ்யாதிகள் எல்லாம் ஸ்பர்ஶாதி நிமித்தங்களால் ஸஞ்சரிக்கும் ஸ்வபாவமுள்ளவைகளென்று சொன்னார். இந்த ரோக பரமாணுக்கள் வஸ்த்ரம் முதலிய அசேதந பதார்த்தங்களில் ஸங்க்ரமித்து, அவைகளின் மூலமாக மனிதனிடத்திலும் ஸங்க்ரமிக்கின்றன ஆகையாலே தான் ‘ வஸ்த்ரமால்யாதி ஸேவநாச்ச ’ இத்யாதிகளால் ரோகிகளுடைய வஸ்த்ராதிகளைக்கூடப் பிறர் உபயோகிக்கக்கூடா

தென்று ஆரோக்ய சாஸ்த்ரம் ஆஜ்ஞாபிக்கிறது. இவ்வபிப்ரா யத்தைக் கொண்டுதான் நமது தர்மக்ரந்தங்களில் பொதுவாகவே பிறர் உபயோகப்படுத்திய வஸ்த்ரங்களை உபயோகிக்கக்கூடா தென்று ‘ [illegible] ’ ([illegible] 1. 9 5.) இத்யாதிகளால் ஹிதமாக உபதேசிக்கப்பட்டி ருக்கிறது போலும். ஒருக்கால் தாரித்ர்யாதி காரணங்களால் பிற ருடைய வஸ்த்ரத்தை உபயோகப்படுத்த நேரிடுமானால், அப் போது அதற்கு ப்ரபலமான ஶுத்தி செய்தே உபயோகிக்க வேணுமென்றும் ‘ [illegible] ’ ([illegible] 1. 9. 6) என்பதால் சொல்லப்பட்டது. சுத்தி செய்யவேண்டிய வழியை வ்யா க்யாதாவான ஹரதத்தர் சொல்லும்போது ‘ [illegible] ’ என்பதால் விவ ரித்துக் கூறினர். ஸாதாரணமாக ஒருவன் தரித்துக்கொண்ட வஸ் த்ரத்தை மற்றொருவன் உபயோகிக்கவேண்டுமானால், அவ்வஸ் த்ரத்திற்குச் சவிட்டு மண் ஜலத்தைக்கொண்டு பக்வம் செய்ய வேண்டுமென்று வெகு ப்ரபல சுத்தியை நம் முன்னோர்கள் விதித் ததற்குத் தகுந்த ஆதாரமில்லாமல் போகவில்லை யென்று யாவ ரும் எளிதாய் அறியமுடியும். ஒருவன் தரித்துக்கொண்ட வஸ்த் ரத்தில் அவன் சரீரத்தினின்று வெளியாகிற துஷ்டாணுக்கள் ஏராளமாக ஸம்பந்தித்து இருக்குமாகையால், அவ்வணுக்கள் நசித் துப்போகக்கூடிய ப்ரபலமான சுத்தியைச் செய்துதான் பிறர் அதை உபயோகப்படுத்தலாமென்று உபதேசிக்கும் நம் முன் னோர்களுக்கும், வஸ்த்ராதிகள் மூலமாகவும் தோஷங்கள் ஸங் க்ரமிக்குமென்கிற அபிப்பிராயம் இருப்பது நிர்விவாதமானது. இவ்வாறே சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற ஒவ்வொரு சுத்திக் கும் தகுந்த மூலமிருக்கு மென்பதை நாம் நம்பவேண்டும்.

இனி இம்மாதிரியான ரோக பரமாணுவைத்தான் மேற்றிசை வைத்யர்கள், க்ருமி விசேஷங்களென்று ஒப்புக்கொள்கிறார்கள். நகரங்களில் ஸாங்க்ராமிக ரோகங்கள் பரவியிருக்கும் காலங்க ளில் க்ருஹாதிகளை ஶுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென் றும், ரோகிகளுடன் எவ்விதத்தாலும் ஸம்ஸர்க்கிக்கக்கூடா

தென்றும், பலவித எச்சரிக்கைகளைச் செய்கிறார்களென்பது யாவரும் அறிந்ததே. ஆகையால் ஸங்க்ரமண ஶீலங்களான அணுக்களை அவர்களும் ஒரு மாதிரியாக ஒப்புக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வணுக்கள் ஓரிடமிருந்து எங்கு ஸங்க்ரமிக்கின்றனவோ, அந்த வஸ்துவின் குணமும் இவைகளின் குணமும் ஸமானமாயிருக்குமானால், அக்குணமானது இவ்வணுக்களின் ஸம்ஸர்க்கத்தினால் வ்ருத்தியடைந்துவிடும்; விபரீதமாயிருந்தால் காலக்ரமத்திலாவது உடனேயாவது அதன் ஸ்வபாவத்தைக் கெடுத்துவிடுகின்றன இதை உதாஹரணத்தால் நன்றாய் அறியமுடியும். மூங்கில் நிழல் அடர்ந்த ஒரு க்ஷேத்ரத்தில் விதைக்கப்பட்ட பீஜமானது அநேகமாகப் பயிராவதில்லை; சிறிது பயிரானாலும் அடியோடு பலனைக் கொடுப்பதில்லையென்பதும் உலகத்தில் அநுபவிக்கப்பட்டதே. இதுபோல் இன்னும் சில வ்ருக்ஷங்களுடைய சாயைகளில் வேறு வ்ருக்ஷாதிகள் பயிராவதில்லையென்பதும் ப்ரஸித்தம். இதற்குக் காரணத்தை யோசிக்கும்போது மூங்கில் முதலியவைகளிலிருந்து வெளியாகிற அணுக்கள், தமக்கு விபரீத குணமுள்ளவைகளில் ஸங்க்ரமித்து, அவைகளின் யோக்யதையை அழித்துவிடுகின்றனவென்றே நினைக்க வேண்டும். இங்கு இன்னொரு ஆஶ்சர்யத்தையும் குறிப்பிடலாம். கேரளதேசத்திலும், மற்றும் சிலவிடங்களிலும் 'தொட்டால் சுருங்கி' என்கிற காரணப்பெயருடன் ஒரு செடிவகை இருந்து வருவதைப் பலர் அறிந்திருக்கலாம். இந்தச் செடியின் ஸமீபத்தில் மனிதன் ஒருவன் சென்று, தன் விரல் நுனியால் அதை வெகு ஸூக்ஷ்மமாகச் சிறிது தொட்டுவிட்டால், உடனே அந்தச் செடியானது அக்நியிலிட்ட பச்சிலைபோல் மிகவும் வாடி வதங்கி வணங்கிவிடுவதை நாம் பல தடவைகளில் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறோம். ஆனால், இப்படி மனிதனுடைய ஸ்பர்ஶத்தால் பெருத்த விகாரத்தையடையும் இச்செடியானது, வேறு ம்ருக பக்ஷி முதலிய ப்ராணிகளுடைய ஸம்ஸர்க்கம் எவ்வளவு இருந்தாலும் அதனால் எவ்வித விகாரத்தையு மடைகிறதில்லை யென்பதையும் நேரில் அநுபவித்திருக்கிறோம். ஆகையால் ஒவ்வொரு ப்ராணிகளுடைய சரீரத்திலிருந்தும் அந்தந்த சரீராநுகுணமாக அணுக்கள் வெளிப்பட்டு இதர வஸ்துக்களை விகாரப்படுத்துகின்றனவென்பது மறுக்கக்கூடியதல்ல.

இந்த அணுக்களனைத்தும் அநேகமாக எவ்வித உஷ்ணத்தையும், விசேஷமாக ஸூர்யகிரணத்தின் தாபத்தையும் ஸஹிக்கக்கூடியவைகளல்ல. ஸூர்யகிரணாதிகளுடைய தாபத்தால் இவ்வணுக்கள் தங்களது சக்தியை இழந்தோ, அல்லது அநேகமாக விநாசத்தை யடைந்தோ எவ்வித வாதகமும் இழைக்கமுடியா. ஆகையாலே தான் ராத்ரி காலங்களில் துர்க்கந்தமுள்ள வஸ்துக்களிடமிருந்து துர்க்கந்தமானது எவ்வளவு அதிகமாக வ்யாபிக்கிறதோ, அவ்வளவு பகலில் வ்யாபிக்கிறதில்லை யென்பது அநுபவஸித்தம். பகலில் ஸூர்யதாபத்தால் இந்த அணுக்கள் சக்தியற்றவைகளாயிருந்து, ஸூர்யன் அஸ்தமித்த பிறகு தனது சக்தியை அடைந்து விசேஷமாக வ்யாபரிக்க ஆரம்பிக்கின்றன. ஆகையால்தான் எப்போதும் ராத்ரி காலங்களில் வெளியில் விசேஷமாக ஸஞ்சரிக்கக் கூடாதென்றும், விசேஷமாக ஸாங்க்ராமிக ரோகங்கள் பரவியிருக்கும் காலத்தில், ராத்ரி ஸஞ்சாரம் அடியோடு கூடாதென்றும், நமது ஆரோக்ய க்ரந்தங்களும் பாஸ்சாத்யர்களுடைய க்ரந்தங்களும் சொல்வது யுக்தமாயிருக்கிறதென்று சொல்லலாம். ஆகையால்தான் மூங்கிலின் அடிவாரமாயிருந்தாலும் அங்கு ஸூர்யகிரணம் விழக்கூடிய ஸௌகர்ய மிருக்குமானல் அங்கு வேறு பயிர்களும் வ்ருத்தியாகலாமென்று தத்வசாஸ்த்ரிகள் அபிப்ராயப்படுகிறார்கள். இதிலிருந்து ஸூர்யகிரணங்களுக்குச் சில ரோகங்களைப்போல ஸ்பர்சாதி ஸம்ஸர்க்க தோஷங்களையும் சாந்தி செய்யக்கூடிய யோக்யதை யுண்டென்பது அறியத்தக்கது. இவ்வபிப்ராயத்தைக் கொண்டுதான் நமது தர்மக்ரந்தங்கள் பலவிடங்களிலும் ‘[illegible]’ இத்யாதிகளால் ஸூர்யதர்சநாதிகள் ப்ராயஸ்சித்த ரூபமாக விதிக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லத்தகும்.

இனி ரோகங்களுக்கு, சரீரம் மநஸ் ஆகிய இரண்டும் அதிஷ்டாநங்களாயிருப்பதாக ‘[illegible] ந:விதியா’ (அஷ்டா. ஸூ. 1. 21) என்பதால் ஆயுர்வேதிகள் நிர்ணயித்தார்கள். ஆகையால் ஆரோக்யத்தை அபேக்ஷிப்பவன், ரோகிகளுடையவும், தன் சரீரகுணத்திற்கு ப்ரதிகூல குணமுள்ள சரீரத்துடன் ஸ்பர்சாதி ஸம்ஸர்க்கங்களை நிறுத்திவிடு

வானுகில், அவனுக்கு ஆமந்துகமான சரீர தோஷம் ஏற்பட ந்யாயமே கிடையாது. இது தர்மசாஸ்த்ரிகளுக்கும் அபிப்ரேதமான விஷயமே. இனி மநஸ்ஸுக்கு, ரஜஸ் தமஸ் என்கிற இரண்டு வகையான தோஷமுண்டென்று '𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌶𑍍𑌚 𑌮𑌨𑌸𑍋 𑌦𑍍𑌵𑍌 𑌚 𑌦𑍋𑌷𑌾𑌵𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑍌' (அஷ்டா. ஸூ. 1. 21) என்பதால் சொல்லப்பட்டது. இவ்விரண்டு மநோதோஷங்களும் ஸத்வகுணத்தை அழித்து, மனத்திற்கு விகாரத்தை உண்டுபண்ணி, அதன் மூலமாக ஶரீரத்தின் ஆரோக்யத்தையே கெடுத்துவிடுகிறது. ஆகையால் ஸத்வகுணம் மேலிட்டிருக்க ஆசைப்பட்டவர்கள், இவ்விரு மநோதோஷங்களும், பிறரிடமிருந்து தன்னிடத்தில் ஸங்க்ரமிக்காமல் காத்துக்கொள்ளவேண்டியது அவஶ்யமாகிறது. ஆனல் மநோவிகாரமானது சரீரத்தின் ஆரோக்யத்தைக் கெடுத்துவிடக்கூடுமோவென்று ஸந்தேஹிக்கவேண்டியதில்லை. சரீரமும் மநஸ்ஸும் ஒன்றுக்கொன்று நெருங்கிய ஸம்பந்தமுள்ளதென்பதை அநுபவத்தில் அறியக்கூடும். சரீரமானது பலவத்தரமான ஜ்வராதிகளால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும்போது, மநஸ்ஸும் அஸ்வாஸ்த்யத்தை அடைகிறதல்லவா? அதுபோல் மனத்திற்கு ஏற்பட்ட விகாரத்தால் சரீரத்திற்கும் அஸ்வாஸ்த்யம் உண்டாகத் தடையில்லை. சிரகாலார்ஜிதமான த்ரவ்ய விநாசத்தாலும் ப்ரிய புத்ராதி வியோகத்தாலும் மனத்திற்கு க்ஷோபம் ஏற்பட, அதனடியாக ஶரீரத்திற்கே அவத்யம் நேரிடுவதைப் பார்த்துவருகிறோம். இதற்கு தசரதாதிகளை உதாஹரணமாகச் சொல்லலாம். உந்மஸ்தகமான காமோத்வேகத்தால் பயங்கரமான தாபஜ்வரத்தை யடைந்த மந்தபாக்யனை முனிகுமாரன், அதனடியாக அந்திமாவஸ்தையைக்கூட அடைந்துவிட்டதாகக் காதம்பரியிலும் சொல்லப்பட்டது. இங்கு இவ்வளவு அநர்த்தங்களுக்கும் ஆஸ்பதமாயிருந்தது மநோவிகார மொன்றுதான். ஆகையாலேதான் காமக்ரோத சோகாதி மநோதோஷங்கள் ரோகோத்பத்தி ஹேதுக்களென்று சரகஸுஶ்ருதாதிகளில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து, ஆரோக்யத்திற்கு ஸத்வகுணமுள்ள மநஸ் முக்ய ஸாதநமாயிருப்பதால், அதற்கு ரஜஸ் தமஸ் முதலிய

துஷ்டகுணங்களுடைய ஸம்ஸர்க்கம் நேரிடாமல் காப்பது மிகவும் அவஸ்யமென்பது ஸ்பஷ்டமாகிறது. ஆகையாலேதான் ‘தேஷாம் காயமநோதேஹா ஹ்யதிஷ்டாநமிஷ்யதே’ என்பதாலும், ‘ரஜஸ்தமஸீ மநஸோ த்வௌ தோஷௌ ஸம்ப்ரகீர்த்திதௌ ।’ என்பதாலும், ரஜஸ் தமஸ் த்வாரா மநஸ்ஸும் ரோகாதிஷ்டாநமென்று ஒப்புக்கொண்டார்கள். இவ்வித மனோதோஷங்கள் உண்டாகாமலிருப்பதற்குத் தமோகுணம் நிறைந்தவர்களுடன் ஸ்பர்சாதி ஸம்ஸர்க்கங்களை நிறுத்தவேண்டியது ஆவஸ்யகமாம்.

நிற்க: ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஸ்ய சூத்ரர்களெனப்படும் நான்கு ஜாதிகளும் தனித்தனியான குணகர்ம விபாகத்துடன், அநாதியாக ஈஸ்வரனாலேயே ஸ்ருஷ்டி செய்யப்பட்டிருப்பதாக நமது ஸ்ருதி ஸ்ம்ருத்யாதி ப்ரமாணங்களால் நிஸ்சிதமாகிறது. இந்த வர்ணவ்யவஸ்தைகள் எல்லாம் ஆதுநிகர்களால் கல்பிக்கப்பட்டனவென்றும், ஸம தமாதி ஸத்குணங்களை முன்னிட்டே இவை ஏற்பட்டதாகையால், நல்ல குணம் அல்லது ப்ருஹ்ம ஜ்ஞாநம் பொருந்திய எவனும் ப்ராஹ்மணனாகி உபநயநாதி ஸம்ஸ்காரங்களைப் பெறத் தடையில்லையென்றும், அவர்களுடன் விவாஹாதி ஸம்பந்தங்களையும் செய்யலாமென்றும் ஸாதிக்க முன்வந்து விட்டார்கள் சில ஆர்ய ஸமாஜிகள் போன்ற நாகரிகர்கள். இப்படி இவர்கள் வாதிப்பதற்கு நமது பகவத் கீதை போன்ற ப்ரமாண க்ரந்தங்களே முக்ய ஆதாரங்களாயிருக்கின்றனவாம். ஸமீப காலத்தில் எழுதப்பட்ட மநு பராஸராதிகளுடைய ஸ்ம்ருதிகளில் ஜாதி பேதங்கள் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருந்தபோதிலும், வெகு ப்ராசீநமென்று சொல்லிக்கொள்ளப்படுகிற வேதத்தில் ஜாதிபேதத்திற்கு ப்ரமாணமே கிடையாதென்றும் நிஸ்சயித்துவிட்டார்களாம்!! [சென்ற வர்ஷத்தில் சென்னையில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் வார்ஷிக ஸம்மேளத்தின்போது, இந்த ஜாதி வ்யவஸ்தையைப்பற்றி ஸபையில் விவாத மேற்பட, அதற்கு ஸமாதாநம் சொல்லப்புகுந்த பண்டிதர்கள் வேதங்களிலிருந்து ஒரு ப்ராமணத்தைக்கூட சொல்ல முடியாமல், ஸ்ம்ருதிகளிலிருந்தே அவை

களை எடுத்துக் கூறியதாகவும், ஸ்ம்ருதிகள் தந்நலம் கருதிய சில நவீந ப்ராஹ்மணர்களால் எழுதப்பட்டவைகளாகையால், அவை ப்ரமாணங்களல்லவென்றும், ஒரு ப்ராஹ்மணன் அப்பொழுதே பத்ரிகைகளில் எழுதியிருந்ததும் இப்போது ஜ்ஞாபகத்திற்கு வருகிறது.] இவ்விஷயத்தைப்பற்றிய ஆக்ஷேபங்களுக்குத் தகுந்த பதிலுரைக்கவேண்டியது அவஸ்யமாயினும், கடிவாள மறுந்த குதிரைகளைப்போல் ப்ரமாண மார்க்கங்களைத் தாண்டி ஸ்வச்சந்த சாரத்தில் ப்ரவ்ருத்தர்களான நாகரிகர்களைப் பூர்வபக்ஷி கோடியில் சேர்த்துப் பதில் சொல்லுவதுகூட ஆஸ்திகர்களுக்கு அநாவஸ்யகமானது. ஆயினும், இவர்கள் சொல்வதுபோல் ஜாதிவ்யவஸ்தைகளுக்கு ஶ்ருதிகளில் ப்ரமாணங்களில்லாமல் போகவில்லையென்றும், ஸ்ம்ருதிகள் பக்ஷபாதமுள்ளவர்களால் எழுதப்பட்டனவல்லவென்றும், அவ்வளவு ப்ரமாணயுக்திகளைக்கொண்டும் நிரூபிக்கக்கூடிய பண்டிதர்களில்லாமல் போய்விடவில்லை என்பதை இவர்கள் எப்போதும் மறந்துவிடக்கூடாது. ஆகையால், ப்ரமாண ஶரணர்களான நாம், இவ்வர்ணவ்யவஸ்தைகள் ஈஶ்வரனால் அநாதியாக ஏற்படுத்தப்பட்டதென்பதை ஒப்புக்கொண்டு ப்ரக்ருத விஷயத்தைப் பராமர்சிக்கிறோம்.

இந்த நான்கு வர்ணங்களும், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களை முக்ய ஸாதநங்களாகக்கொண்டு ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதாக ஸ்ருஷ்டி ப்ரகரணங்களில் சொல்லப்படுகிறது. ப்ராஹ்மணனை ஸத்வகுணத்துடனும், க்ஷத்ரியனைச் சிறிது ஸத்வம் கலந்த ரஜோகுணத்துடனும், வைஶ்யனைச் சிறிது தமோகுணம் கலந்த ரஜோகுணத்துடனும், நான்காவது ஜாதியைத் தமோகுணத்துடனும் ஈஶ்வரன் ஸ்ருஷ்டி செய்வதாய் ப்ரமாணங்கள் கூறுகின்றன. இம்மூன்று குணங்களுடையவும், ஸ்வரூபம், குணம் முதலியவற்றைப்பற்றி ஆயுர்வேத க்ரந்தங்களும் கீதையும் விஸ்தரித்துக் கூறுவதால் அங்கேயே கண்டுகொள்ளலாம். இந்த குணபேதமுள்ளவர்கள் பரஸ்பரம் ஸ்பர்சாதி ஸம்ஸர்க்கங்களைச் செய்யக்கூடாதென்றுதான் தத்வஜ்ஞர்களான

ரிஷிகள் சொல்லியுள்ளார்கள். ஸத்வ குணமுள்ளவன் தமோ குணம் நிறைந்தவனுடன் அடிக்கடி ஸம்ஸர்க்கிப்பதால், தமோ குணமுள்ள அணுக்கள் இவனிடத்தில் ஸங்க்ரமித்து, காலக்ரமத்தில் ஸத்வத்தை அழித்துத் தமோகுணத்தை வ்ருத்திசெய்து விடும். மநஸ்ஸானது ஸத்வத்தை இழந்து தமஸ்ஸால் ஆக்ரமிக்கப்பட்ட மாத்ரத்தில், அதற்கேற்றவைகளான ஹீந கர்மங்களில் புருஷனை ப்ரவ்ருத்திக்கச் செய்கிறது. ஆகையாலேதான் தர்ம க்ரந்தங்களில் புத்திபூர்வகமாகத் தவறுதலைச் செய்கிறவனுக்கு ப்ராயஶ்சித்தம் அதிகமாக உபதேசிக்கப்பட்டது. அதாவது, ஒருவனுக்குத் தமோகுணம் மேலிட்டு, புத்தி கெட்டாலல்லது அவன் துஷ்கார்யங்களைச் செய்யமாட்டானாகையால், அவன் செய்திருக்கிற துஷ்கார்யத்தைக்கொண்டு இவனுக்குத் தமோகுணம் மேலிட்டிருப்பதாக ஊஹித்து, அந்த தமஃபரமாணுக்கள் நசிக்கும்வரையில் க்ருச்ர சாந்த்ராயணாதிகள் சொல்லப்பட்டிருப்பதாக நினைக்க வேண்டும். இதில் சில அணுக்கள், ஸங்க்ரமித்த சில க்ஷணங்களுக்குள் தம்முடைய குணத்தை வெளியாக்கிவிடும். சில, காலக்ரமத்திலும் இப்படிச் செய்யுமென்கிற அபிப்ராயத்துடனே தான் மந்வாதிகள் சில தோஷங்கள் உடனே அநர்த்தத்தைக் கொடுக்கக்கூடியவைகளென்றும், இன்னும் சில, காலக்ரமத்தில் அப்படிச் செய்யக்கூடுமென்றும் ஒப்புக்கொண்டார்கள்.

ரஜஸ் தமஸ் என்கிற இரண்டு மநோதோஷங்களும் ஸ்பர்சாதிகளால் ஸங்க்ரமிப்பது போல், ஆஹார த்வாரமாயும் ஸங்க்ரமித்து மநஸ்ஸைக் கெடுத்துவிடும். எந்த வஸ்து ரஜஸ் அல்லது தமோகுணத்தை வ்ருத்தி செய்யக்கூடியதோ, அதை உபயோகிப்பவர்களுக்கு ஸத்வம் அடியோடு க்ஷீணித்து, சித்தம் கெட்டுவிடுகிறது. ஆஹாராநுகுணமாக மனத்திற்கு ஸங்கோச விகாஸாதிகள் உண்டாகிறதை யாவரும் அநுபவித்து வருகின்றோம். மிகவும் உந்மாதகரங்களான ஸுராதி வஸ்துக்களை உபயோகிப்பவர்களுடைய மநோவிகாரத்தையும், இதற்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லலாம். இம்மாதிரியாகத் தமோகுணம் நிறைந்த வஸ்துக்களை உபயோகித்த சில க்ஷணங்களுக்குள்ளே புருஷனுடைய

மனோவ்ருத்தி கெட்டுப்போய்விடுகிறதற்குக் காரணமும் சொல்ல வேண்டுமோ? ஸத்வகுணமுள்ள ஆஹாரஸேவநத்தால் ஸத்வாபிவ்ருத்தி உண்டாகி மநஸ் சுத்தப்படுகிறது. விபரீத குணமுள்ள ஆஹாரத்தினல் விபரீத குணமுண்டாகிறது ஸஹஜமேயாகும். இதைத் தான், 'ஆஹாரஶுத்தௌ ஸத்வஶுத்திঃ ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதிঃ' (சாங்-7-26) என்பதால் விளக்கிச் சொல்லப்பட்டது.

ஆஹாரத்தினுடைய குணதோஷத்தினல் மனோகுணம் மாறுகிறதாகச் சொல்லும்போது, ஆஹாரத்திற்கும் மனத்திற்கும் ஸம்பந்தமுண்டோவென்று ஆஶங்கை நேரிடலாம். ஶ்ருதியில் அந்நத்தின் அம்ஶமே மநஸ்ஸாகிறதென்று 'அந்நமயம் ஹி ஸோம்ய மநঃ' என்பதால் சொல்லப்பட்டது. இந்த ஶ்ருதியின் தாத்பர்யத்தைத்தான் 'அந்நமஶிதம் த்ரேதா விதீயதே தஸ்ய யঃ ஸ்தவிஷ்டோ தாதுஸ்தத்புரீஷம் பவதி, யோ மத்யமஸ்தந்மாம்ஸம், யோऽணிஷ்டஸ்தந்மநঃ' (சாங்- 6-5) என்கிற ஶ்ருதியானது விவரித்துக் கூறுகிறது. அதாவது நாம் உபயோகிக்கும் அந்நமானது மூன்று விதமாகப் பிரிகிறது. அதனுடைய ஸ்தூலமான பாகமானது புரீஷமாகவும், மத்யம பாகமானது மாம்ஸமாகவும், அணுவான பாகமானது மநஸ்ஸாகவும் மாறிவிடுகிறது. ஆகையால், எந்த மாதிரியான ஆஹாரத்தை நாம் உபயோகிக்கிறோமோ அதே குணமுள்ளதாகவே மநஸ்ஸும் பரிணமத்தை யடைகிறதென்பது நிர்விவாதமானது. ஆகையாலேதான் ஸத்வகுண முள்ளவருக்கும், பிறருக்கும், த்யாஜ்யோபாதேயங்களான ஆஹாரங்களை அபிஜ்ஞர்களான நமது மஹர்ஷிகள் நிர்ணயித்துக் கொடுத்தார்கள். அதன்படி நடப்பவர்களுக்கு எவ்விதமான சரீர மனோதோஷங்களும் உண்டாவதற்கு ஸம்பவமில்லை. ஆகையால், இதுவரையிலும் சொல்லிவந்தபடி சரீரமும் மநஸ்ஸும் ஆரோக்ய ஹேதுவென்று ஸ்பஷ்டமாகிறபடியால் இவ்விரண்டையும் ஸ்பர்சாதி தோஷங்களிலிருந்து காக்கவேண்டியது அத்யந்தாவஶ்யகமானது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ராஜ ராஜ்ய க்ஷேமம்.

(தொடர்ச்சி.)

ஒவ்வொரு ஆலயங்களிலும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களோடும் மேற்சொல்லப்பட்ட நற்குணங்களுடனும் கூடின ஆசார்யன் ஒருவன் அவஸ்யம் இருக்கவேண்டும். 'ஆசார்யாதீநா ஹி ஸித்தய:' என்று சொல்லப்படுவதால் ஆலயங்களில் அவன் பகவத்ஸாந்நித்ய மூலமாக ஸர்வ பல ஸித்தியை உண்டாக்குவதால் இது முக்யமானது. இது அவஸ்யம் என்பதை, பாத்ம ஸம்ஹிதை 24-ம் அத்யாயத்தில், 'ஸம்ப்ரோக்ஷணாதி நிர்வ்ருத்தௌ ப்ரதிஷ்டா ஸ்தாபநம் - ஆசார்யம் வரயேத் பூர்வம் ஆசார்யாதீநா ஹி ஸித்தய: - ந்ருணாம் ஜ்ஞாநாதிரேகஸ்ய நிர்வ்ருத்தௌ க்ஷேத்ராணாம் ப்ரயஸ்யதே: - க்ஷேத்ராண ஹஸ்தம் ஶ்ருதவாந் வ்ருத்தவாந் ஶீலவாந் கவி: - ஆஸ்திக ஸம்ப்ரதாயஸ்தோ ப்ராஹ்மணோ யஜ்ஞஶாஸ்த்ரவித் - ஸம்ஸார வித்யாநிஷ்ட:' என்று தொடங்கி, ஸர்வ குணான்விதனான ப்ராஹ்மணன் ஆசார்யனாக இருக்கவேண்டுமென்றும், அவன் ப்ராஹ்மணனாக இருக்கவேணுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ விஷ்ணுதிலகத்தில் 6-வது அத்யாயத்தில், 'ஆசார்யம் வரயேத் பூர்வம் யஸ் ஸாஸ்த்ரஜ்ஞ: க்ரியா: - ஸர்வத்ர ஸத்க்ஷேத்ரஜ்ஞ: ப்ராஹ்மணோ வேதவித் ஸதா - வேதவேதாந்த தத்வஜ்ஞோ ஸம்ஸாரார்ணவ தாரக:' என்று ஆரம்பித்து, 'ஆசார்யம் வரயேத் பூர்வம் ஆசார்யாதீநா ஹி ஸித்தய:' என்று ஸர்வ கார்யங்களும் ஸர்வ பலங்களும் ஆசார்யாதீநமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஈஸ்வரஸம்ஹிதை 16-வது அத்யாயத்தில், 'ஸித்த

[illegible]' என்று ஆரம்பித்து, ருத்விக்குகளும் ஆசார்யனும் மந்த்ரஸித்தி யுள்ளவனுக வும் வேதாந்தஜ்ஞாந ஸம்பந்நனுகவும் ஆசாரபூர்ணனுகவும் ப்ராஹ்மணனுகவும் இருக்கவேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற ஸம்ஹிதைகளிலும், ஆசார்யன் ஸர்வகுணலங்க்ருதனுகவும் ப்ராஹ்மணனுகவும் இருக்கவேணுமென்பதையும், இவன் சொல்லுகிறபடி யஜமாநன் ஆலய தர்மங்களை நடத்தி வைக்கவேணுமென்று அநேகம் வாக்யங்கள் காணப்படுகின்றன.

இங்கு ஒரு தந்த்ரத்தில் தீக்ஷிதன், மற்றொரு தந்த்ரத்தில் ஆசார்யனுக இருக்கவோ அல்லது ஆராதநம் செய்யவோ கூடாது என்றிருந்தாலும், ஸ்ரீ ஸாத்வதம் பௌஷ்கரம் என்னும் ஸம்ஹிதோக்த க்ரமமாக, தீக்ஷிதனுனவன் மற்ற தந்த்ரங்களிலும் அந்வயிக்க யோக்யன் என்பதுபோல், ஸ்ரீ விஷ்ணுதிலகம் முதலாவது அத்யாயத்தில் '[illegible]' இத்யாதி வாக்யங்களினுல் ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யத்துக்கும் ஆலயாராதநாதிகளில் யோக்யதை உண்டு என்று ஏற்படுகிறது. இப்படியே அகோர ஶிவாசார்ய பத்ததியிலும், '[illegible]' என்று ஆரம்பித்து, ஜ்ஞாநாநுஷ்டாநம் பொருந்தினவனே ஆசார்யனுக இருக்கவேணுமென்றும், அவன் ப்ராஹ்மணனுக இருக்கவேணுமென்றும், இவ்விதமே ருத்விக்குகளும் ஸாதகாசார்யர்களும் இருக்கவேணுமென்றும் சொல்லப்படுகிறது. '[illegible]

[illegible] ’ [ஈஶ்வர ஸம்ஹிதை, 18-ம் அத்யாயம்] இவ்விதமாக ஆலயதர்மம் முழுவதும் இவன் அதீநமாக நடத்த வேண்டியதால் ஆசார்யன் ஆலயந்தோறும் இருக்கவேண்டியது அவஶ்யம்.

இதுபோலவே வேதபாராயணம் என்பது ஆலயதர்மத்தில் முக்யம் என்பதை ஈஶ்வர ஸம்ஹிதை 19-வது அத்யாயத்தில் ‘[illegible]’ என்றும், பாத்ம ஸம்ஹிதை 18-வது அத்யாயம் ப்ராயஶ்சித்த ப்ரகரணத்தில் ‘[illegible]’ என்றும், ஸம்வத்ஸராராதநங்களில் ஏற்படும் தவறுதலுக்கு ப்ராயஶ்சித்தமாகச் சொல்லப்படும் பவித்ரோத்ஸவத்தில், எல்லா ஸம்ஹிதைகளிலும் வேதபாராயணம் அவஶ்யம் என்பதை, [illegible] ‘[illegible]’ என்றும், [illegible] ‘[illegible]’ என்றும், இவ்விதமே ஶைவாகமங்களிலும் வேதபாராயணம் என்பது ஸர்வ ப்ராயஶ்சித்தமாகவும் பகவத் ஸாந்நித்ய வர்த்தகமாகவும் சொல்லப்படுவதால், இதுவும் ஆலயதர்மத்தில் அவஶ்யமானது.

இக்காலத்தில் ‘[illegible]’ என்பதுபோல் பூஜை யறியாத பூஜகர் பூஜையில், வேதமறியாத வேதியர் வேதம் ஓதுகிறார்கள். இக்கலியில் வேத

